ஒவ்வொரு கிராமத்திலும் ஒரு உயர்நிலைப்பள்ளி ஏற்படுத்த வேண்டும் என்ற உணர்வு ஏற்பட்டு விடும்; எத்தனை குறைவான மாணவர்கள் இருந்தாலும் ஒரு உயர்நிலைப்பள்ளி வேண்டும் என்ற எண்ணம் ஏற்படும். அதனாலதான் உயர்நிலைப்பள்ளி என்றால் 10,000 ரூபாய் கட்டவேண்டும், கல்லூரி என்றால் 5,00,000 ரூபாய் கட்டவேண்டும் என்ற முறையை மேற்கொண்டிருந்தார்கள். அந்த முறைதான் இப்போது மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

திரு. வெ. முனுசாமி : மானேஜ்மெண்டு நடத்துகிற உயர்நிலைப் பள்ளிகள் அத்தனையையும் அரசாங்கமே ஏற்றுக்கொள்ள உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : நான் முதலிலேயே கூறியிருக்கிறேன். இப்பொழுது அப்படிப்பட்ட உத்தேசம் இல்லை.

பகுதி நேரப் பட்டப்படிப்பு

*225 வினா.—**திரு. க. ர. நல்லசிவன் :** மதிப்பிற்குரிய கல்வி-தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) பொறி இயல் துறையில் பகுதி நேரப் பட்டப்படிப்புக்கு இந்த ராஜ்யத்தில் எங்கெங்கு வசதி செய்யப்பட்டிருக்கிறது ?

(இ) கிராமப்புறங்களில் வேலை செய்வோர்களும் பலனடையும் வகையில் இத்திட்டத்தை விஸ்தரிக்கும் உத்தேசம் ஏதேனும் பரிசிலனையிலுள்ளதா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) தற்பொழுது அத்தகைய பகுதி நேர பொறியியல் பட்டப்படிப்பு வகுப்புக்கள் இம்மாநிலத்தில் நடைபெறவில்லை.

(இ) இல்லை.

திரு. க. ர. நல்லசிவன் : மீதியுள்ள மாநிலங்களில் 5, 6, ஆண்டுகளுக்கு முன்பே பகுதி நேர கல்லூரிப் படிப்புகள் ஆரம்பிக்கப் பட்டு விட்டன. ஆகவே, விரைவிலே பகுதி நேர பொறியியல் பட்டப்படிப்பு வகுப்புக்கள் ஆரம்பிப்பதற்கான ஏற்பாட்டை சர்க்கார் செய்வதற்கு உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : பொறியியல் துறையில் டிப்ளமா பெற்றவர்களுக்கு பகுதி நேர பட்டப்படிப்பு சொல்லிக் கொடுத்து பி.ஈ. பட்டம் கொடுப்பதற்கு இரண்டு கல்லூரிகளில் ஒரு முன்னோடித் திட்டத்தை வகுப்பதற்கு இந்திய சர்க்கார் ஒரு திட்டத்தை வகுத்து அனுப்பியிருக்கிறார்கள். அந்த அடிப்படையில் சென்னை பொறியியல் கல்லூரியிலும், கோயம்புத்தூர் பொறியியல் கல்லூரியிலும் அந்தத் திட்டத்தைக் கொண்டு வருவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. அதைப் பற்றி பல்கலைக் கழகத்துக்கு 14-6-1967-ல் அனுமதிக்கு விண்ணப்பம்

செய்யப்பட்டிருக்கிறது. அந்த அனுமதி இப்பொழுது எதிர்பார்க்கப்படுகிறது. அனுமதி கிடைத்தவுடன் இந்த ஆண்டில்கூட இந்த இரண்டு கல்லூரிகளில் பகுதி நேர பொறியியல் பட்டப்படிப்புக்கு வசதிகள் செய்யப்படும்.

வருவாய்த் துறை நெறிக்குழுவின் ஆணைகள்

* 226 வினா.—திரு. வி. கே. கோதண்டராமன்: மதிப்பிற்குரிய உணவு-வருவாய்த்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) இப்போதுள்ள ரெவின்யூ ஸ்டேன்டிங் ஆர்டரை மாற்றி, திருத்தி அமைக்கும் உத்தேசமுண்டா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

திரு. என். சங்கரய்யா: இந்த ரெவின்யூ போர்டு உத்தரவுகள் காலத்திற்கேற்றவாறு திருத்தியமைக்கப்படவேண்டிய அவசியம் இருப்பதன் காரணமாக, இப்பொழுது இருக்கக்கூடிய புதிய அரசாங்கம் அவைகளில் காலாவதியான முறையில் இருக்கக்கூடிய அம்சங்களை நீக்கிவிட்டு, இன்றைக்கு ஏற்ற முறையில் அவைகளை திருத்தி அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: பொதுவாக அவ்வப்பொழுது சில திருத்தங்கள் தேவைப்படும்பொழுது திருத்தங்கள் செய்யப்படுகின்றன. ஆனால், இப்பொழுது நிலவரி நீக்கம் சம்பந்தமாக பெரிய மாறுதல்கள் ஏற்பட்டிருக்கிற காரணத்தினால், அவைகளைத் திருத்தலாமா என்பதைப்பற்றி அரசாங்கம் ஆலோசிக்கும்.

THIRU K. VINAYAKAM: Sir, whereas most of the Board's Standing Orders are outdated and obsolete and they serve no utilitarian purpose as far as the people are concerned, and whereas even in the matter of assignment of lands, there are more rules to refuse assignment to the landless people rather than to assign these lands to the deserving people, and whereas most of the rules are discredited and even the Members of the Boards are not in favour of them, will the Government reconsider the possibility of constituting a departmental committee with experts in this line and then formulate a new set of rules which would be useful to the people of our State?

THE HON. THIRU K. A. MATHIALAGAN: I have already answered this question. Many of the rules which had been framed in 1878 and reprinted in 1958 are outmoded and in view of the abolition of the land tax, it has become essential that there must be re-examination and the Government will look into it.